2019 ஜூலை 12]

முற்பகல் 11–15

2. தகவல் கோரல்

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள். இல்லையில்லை. இன்று காலையில்தான் என்னிடம் அறிவிப்பு கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) அது என்னுடைய ஆய்வில் இருக்கிறது. அதனைப் பரிசீலித்து, நான் முடிவு செய்கிறேன். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா, நீங்கள் அறிவிப்பு கொடுத்திருக்கிறீர்கள். அதுகுறித்து பதில் வரட்டும். பதில் வராமல் எடுத்துக்கொள்ள முடியாது. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா, நீங்கள் உட்காருங்கள். அதற்கெல்லாம் பதில் வர வேண்டும். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின், உட்காருங்கள்.*

3. சிறப்புக் கவன ஈர்ப்பு

கொடைக்கானல், மறு ஆய்வு முழுமைத் திட்ட வேறுபாடுகளைக் களைந்து ஒரு முறை வரன்முறைப்படுத்தும் திட்டம் செயல்படுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கொடைக்கானலில் ஒருமுறை வரன்முறைப்படுத்தும் திட்டத்தின்கீழ், கட்டட உரிமையாளர்களுக்கு வாழ்வியல் பாதுகாப்பு வழங்கி, புதிய கட்டட வரன்முறைத் திட்டம் கொண்டு வர வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார் அவர்கள், விதி 55–ன்கீழ் அறிவிப்பு கொடுத்துள்ளார். இதனை நான் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து சுருக்கமாக மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார் அவர்கள்.*

திரு. ஐ.பி. செந்தில்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 6–3–2019 ஆம் நாள் கொடைக்கானல் நகரப் பகுதிகளில் இருக்கக்கூடிய குடியிருப்புகள், விடுதிகள் மற்றும் வர்த்தக நிறுவனங்களுக்குப் புதிய முழுமைத் திட்டம்*

ஒன்று அரசின் சார்பில் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது. அறிமுகப்படுத்தப்பட்டுள்ள அந்தத் திட்டத்தின் வரைபடத்திற்கும், நகர அளவு எண்கள் உடைய அந்தப் பட்டியலுக்கும், அங்கே பிரிக்கப்பட்டிருக்கக்கூடிய மண்டலங்களுக்கும் நிறைய வேறுபாடுகள் இப்போது இருக்கின்றன. எனவே, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புவது, Expert Committee கூட்டத்தைக் கூட்டி, அந்தக் கூட்டத்தில் மக்களுடைய உணர்வுகளைத் தீர ஆராய்ந்து புதிய Master Plan திட்டம் மக்களுக்கு எளிய வகையில், பயன்படக்கூடிய வகையில் அமைவதற்குரிய வழிவகைகளைக் காண வேண்டும். குறிப்பாக, அத்தியாயம் 10, சட்ட முன்வடிவு 58/1992–ன்கீழ், மலை வாழ்விடங்களில் உள்ள கட்டடங்களின் விதிமுறைகள் சட்ட திருத்த மசோதாவில் திருத்தம் ஒன்றைக் கொண்டு வந்து, 1993 ஆம் ஆண்டுக்குப் பிறகு நடப்பாண்டு வரை கட்டப்பட்டிருக்கக்கூடிய குடியிருப்புகள், விடுதிகள் மற்றும் வர்த்தக நிறுவனங்களுக்கு ஒரு முறை வரன்முறைப்படுத்துகிற அந்த முறையை எப்படியாவது இந்த அரசு கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு அங்கே கிட்டத்தட்ட 306 கட்டடங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அதில் நேரடியாக பணிபுரிகின்ற 5,000 மக்கள் மற்றும் மறைமுகமாகப் பணிபுரிகின்ற 5,000–க்கும் மேற்பட்ட மக்களுடைய எதிர்கால வாழ்வைப் பாதுகாப்பதற்கு நிச்சயமாக இந்த அரசு ஒரு முறை வரன்முறைப்படுத்துகிற (One Time Regularisation) திட்டத்தைக் கொண்டு வருவதன் அவசியம் குறித்து தங்கள் மூலமாக மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்த்து அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடைக்கானல் உள்ளூர் திட்டக் குழுமப் பகுதிக்கான முதலாம் முழுமைத் திட்டத்திற்கு 11–5–1988–ல் அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டது. அதன் பின்னர் 31–10–1988 வரை பெறப்பட்ட ஆட்சேபணைகள் மற்றும் ஆலோசனைகளின் அடிப்படையில் முதலாம் முழுமைத் திட்டத்திற்கு 4–3–1993–ல் ஒப்புதலும் அளிக்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டது.

கொடைக்கானல் நகரில் 1–11–1988–லிருந்து சில கட்டடங்கள் அனுமதியற்றும் மற்றும் விதிகளை மீறியும் கட்டப்பட்டுள்ளன.

இதற்கிடையே சென்னை உயர் நீதிமன்றம், பொது நல வழக்கு ஒன்றில், நீதிப் பேராணை எண் 268/2004–ல் எல்லாவிதமான விதி மீறல் கட்டடங்கள் மீதும் உரிய அமலாக்க நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டது.

மேலும், அனுமதியற்ற கட்டுமானங்கள் அமையும் நிலங்கள் சம்பந்தமாக நீதிமன்ற உத்தரவினைத் தொடர்ந்து, கொடைக்கானல் முழுமைத் திட்டத்தினை மறு ஆய்வு செய்ய 9 உறுப்பினர்களைக் கொண்ட வல்லுநர் குழுவை நியமித்து, 15–9–2010–ல் அரசாணை வெளியிடப்பட்டது. கொடைக்கானல் நகரப் பகுதிகளில் விதிகளை மீறி கட்டப்பட்ட கட்டடங்கள் குறித்து நகர் ஊரமைப்புச் சட்டம் மற்றும் நகராட்சி சட்டத்தின்கீழ் நடவடிக்கை தொடரப்பட்டு வருகிறது. இவற்றில், சிலர் அரசுக்கு மேல்முறையீடு செய்தனர். பலர் மேல்முறையீடு செய்யவில்லை. விதி மீறல் இருந்த காரணத்தினால் மேல் முறையீட்டு மனுக்களை அரசு நிராகரித்தது. அதனால் மேல் முறையீட்டாளர்கள் நீதிமன்றத்தை நாடினார்கள்.

கட்டட அனுமதி மறுக்கப்பட்டவர்கள் மற்றும் ஓட்டல் உரிமையாளர்கள் சங்கத்தினரும் கொடைக்கானல் மறு ஆய்வு முழுமைத் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டால், அவர்களது கட்டடங்கள் விதிமுறைக்கு உட்படும் என்று கருதி, மறு ஆய்வு முழுமைத் திட்டத்திற்கு விரைந்து ஒப்புதல் அளிக்கக் கோரி, சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரை கிளையில் வழக்கும் தொடர்ந்தனர். இவ்வழக்கோடு உயர் நீதிமன்றத்தில் கொடைக்கானல் நகரில் விதி மீறி கட்டிய கட்டட உரிமையாளர்கள் தொடர்ந்த 58 வழக்குகளையும் ஒன்றிணைத்து நீதிப் பேராணை எண் 914/2018–ன்கீழ் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

முற்பகல் 11–20

கொடைக்கானல் நகரில் 2007 ஆம் ஆண்டு வரை 1,415 அனுமதியற்ற கட்டடங்களும், அதன் பின்னர் 81 அனுமதியற்ற கட்டடங்களும் ஆக மொத்தம் 1,496 அனுமதியற்ற கட்டடங்கள் உள்ளன. இவற்றில் 1,221 குடியிருப்பு கட்டடங்களும், 233 வணிகக் கட்டடங்களும், 29 அலுவலகக் கட்டடங்களும், 9 வழிபாட்டு கட்டடங்களும், 4 ஆக்கிரமிப்பு கட்டடங்களும் உள்ளன. மேற்கூறிய கட்டடங்கள், முழுமைத் திட்ட நில உபயோகங்களுக்கு மாறுதலாகவும், விதிமீறிய கட்டடங்களாகவும் உள்ளன. அனைத்து

அனுமதியற்ற கட்டடங்கள் குறித்தும் உரிய முறையில் ஆய்வு செய்து, சட்டரீதியான முடிவுகள் மேற்கொண்டு அமலாக்க நடவடிக்கைகள் எடுத்து 11–3–2019 அன்று அறிக்கை செய்ய மதுரை உயர் நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், கொடைக்கானல் மறு ஆய்வு முழுமைத் திட்டத்திற்கு 6–3–2019–ல் அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டது. மதுரை உயர் நீதிமன்ற உத்தரவு 11–3–2019 அன்று பெறப்பட்ட பின்னர், 120 மேல்முறையீட்டு விண்ணப்பங்கள் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையிடமும், 147 மறு ஆய்வு விண்ணப்பங்கள் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையிடமும் வழங்கப்பட்டுள்ளன. அதனைத் தொடர்ந்து விண்ணப்பதாரர்களிடம் தனிநபர் ஆய்வு 2–4–2019 மற்றும் 3–4–2019–ல் நடத்தப்பட்டது. இதில் 118 விண்ணப்பதாரர்களின் கோரிக்கைகள், 2019 ஆம் ஆண்டு கொடைக்கானல் மறு ஆய்வு முழுமைத் திட்ட நில உபயோகப் பயன்பாட்டின்படி ஆய்வு செய்யப்பட்டன. அதன்படி 35 விண்ணப்பங்கள் முழுமைத் திட்ட நில உபயோகத்தினை நிறைவு செய்தும், 81 விண்ணப்பங்கள் முழுமைத் திட்ட நில உபயோகத்திற்கு மாறாகவும், 2 விண்ணப்பங்கள் முழுமைத் திட்டத்தில் பிழைதிருத்தம் செய்யப்பட வேண்டிய நிலையிலும் உள்ளன.

மறு ஆய்வு முழுமைத் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து, மறு ஆய்வு முழுமைத் திட்ட நில உபயோகத்தை நிறைவு செய்யும் கட்டடங்களுக்கு திட்ட அளவுருக்களை (Planning Parameters) நிறைவு செய்யும்பட்சத்தில் திட்ட அனுமதி வழங்க இயலும்.

மறு ஆய்வு முழுமைத் திட்ட நில உபயோகம் நிறைவு செய்யப்பட்டாலும், திட்ட அளவுருக்கள் (Planning Parameters) நிறைவு செய்யப்பட வேண்டிய இனங்களில் உரிமையாளர்கள் கட்டடங்களை சரிசெய்து விண்ணப்பித்தால், அக்கட்டடங்களுக்கும் திட்ட அனுமதி வழங்க இயலும்.

மறு ஆய்வு முழுமைத் திட்டத்தின்படி கலப்பு குடியிருப்பு பயன்பாட்டு மண்டலங்கள், வணிக பயன்பாட்டு மண்டலங்கள் மற்றும் பொது பயன்பாட்டு மண்டலங்கள் ஆகியன பலதரப்பட்ட பயன்பாட்டு மண்டலங்களாக (Multi Use Zone)

வகைப்படுத்தப்பட்டுள்ளன. மேலும், சில கூடுதல் பயன்பாட்டு நடவடிக்கைகளை பயன்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ளது. வியக்கத்தக்க இந்தியா சுற்றுலா கொள்கை (Incredible India Tourism Policy) மற்றும் சுற்றுச்சூழல் சுற்றுலா (Eco Tourism) கொள்கையின்படி படுக்கை மற்றும் காலை உணவு வசதிகள் கொண்ட (Home Stay) நடவடிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு தாவர மற்றும் குடியிருப்புப் பயன்பாட்டு மண்டலங்களில் (Vegetative and Residential Use Zones) அனுமதிக்கப்பட்டுள்ளன.

கொடைக்கானல் நகர், மலைவாழிடத்தில் உள்ளதாலும், சுற்றுச்சூழலைப் பாதுகாக்க வேண்டிய அவசியம் உள்ளதாலும், கட்டட விதிமீறல்களை ஆராய்ந்து அவற்றை நெறிமுறைப்படுத்துவது குறித்து சம்பந்தப்பட்ட துறைகளின் ஆலோசனை பெறப்பட்டு, உயர் நீதிமன்றத்தின் இறுதி ஆணை பிறப்பிக்கப்பட்டவுடன், தேவைப்படும் இனங்களில் மலையிடப் பாதுகாப்பு குழுமத்தின் (HACA Committee) அனுமதியுடன் கட்டடங்களை வரன்முறைப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11–25

2. தகவல் கோரல்—தொடர்ச்சி

(ஆ) கம்பம் மற்றும் கடையநல்லூர் தொகுதிகள், வன விலங்குகளால் ஏற்படும் உயிரிழப்பு மற்றும் பயிர் சேதங்கள் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.டி.கே. ஜக்கையன் அவர்கள்.

திரு. எஸ்.டி.கே. ஜக்கையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு துணை முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களுக்கும், அனைத்து அமைச்சர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.